**56 இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்**

இலக்கண இலக்கியங்களில் சிறந்த குலசேகர பாண்டியனுக்கு சங்கப் புலவரகளுடன்சங்கப்பலகை இடமளித்தது. குலசேகரனின் கல்வித் திறமையைக் கேள்விப்பட்ட கபிலனின்நண்பனான இடைக்காடன் தமிழ் நூல் ஒன்று இயற்றி அரசனிடம் சென்றுப் பாடிக் காட்டினான். பொறாமையால் குலசேகரன் தன்னுடைய மகிழ்ச்சியை வெளிக் காட்டாமல் இருந்தான். அரசன்தன்னை மதியாமல் இருந்ததைக் கண்டு மாணஉணர்வு மேலோங்க அரண்மனையை விட்டு ஐயன் கோயிலை அடைந்தான் இடைக்காடன்.

தனக்கு நிகழ்ந்த அவமானத்தை சொல்லின் வடிவமாகிய அன்னைக்கும், அதன் பொருளின்வடிவமான ஐயனுக்கும் நிகழ்ந்ததாக தான் எண்ணுவதாகக் கூறி வட திசை நோக்கிச்சென்றான். இதைக் கேட்ட ஐயன் கபிலனுக்கும் இடைக்காடனுக்கும் அருள எண்ணம் கொண்டு திருவாலவாயில் திருக்கோயிலுக்கு நேர் வடக்கே ஓர் திருக்கோயில் அமைத்துஉமாதேவியுடன் அங்கு சென்றார் தங்கினார். சங்கப்புலவர்களும் சிவபெருமான் போன வழியில்போய் அங்கேயே தங்கிவிட்டனர்.

மறுநாள் கோயிலுக்குச் சென்ற சிவனடியார்கள் லிங்கத்தைக் காணாது வருந்தி மன்னனிடம் முறையிட்டார். செய்தியறிந்த மன்னன் செயலற்று செய்வதறியாது வருந்தினான். அச்சமயம் மக்கள் வைகையாற்றின் தென்கரையில் அய்யன் அம்மையுடன் சங்கப்புலவர்கள் சூழஎழுந்தருளியிருப்பதாக கூறினார்கள். உடனே அங்கு சென்று ஐயனை தரிசித்து, மதுரையைவிட்டு அவர் நீங்கி இங்கு வந்தது யார் செய்த பிழையினால் என்ற காரணத்தைக் கூறுமாறு கண்ணீர் மல்க நின்றான்.

தலங்களில்சிறந்ததாகக்கூறப்படும் திருவாலவாயிலில் எண்ணற்ற சிவலிங்கங்கள் உள்ளன. அவற்றுள் அறுப்பத்தாறு லிங்கங்கள் மிகவும் சிறப்பானவை. அவற்றுள் அஷ்டதிக்பாலகர்களால் பூஜிக்கப்பட்ட எட்டு லிங்கங்கள் குபேரனால் பூஜிக்கட்ட லிங்கம் இத்தலத்தில்உள்ளது. அதனால் தான் அங்கு வந்ததாகக் கூறினார் .இத்தலம் அன்று முதல் வட திருவாலவாய் என்று வழங்கப்பட்டது)

மேலும் மன்னன் தனது பக்தனான இடைக்காடனின் பாடலை அவ மதித்ததால் கடம் வனம் நீங்கிதான் இங்கு வந்தாகக் கூறினார். அரசன் தான்செய்தகுற்றத்திற்குவருந்தியதன்னைப்பொருந்தருளுமாறு அப்பனிடம்வேண்ட, ஐயனும் அவன்குறைப் பொருத்து அருள்கூர்ந்து மீனாட்சி அம்மையுடன் கடம்பவனம் திரும்பினார்.

பாண்டியன் இடைக் காடனை சங்கப் புலவரகளோடு அழைத்து வந்து, அவனுடைய பாடல்களைக் கேட்டு தகுந்த மரியாதையுடன்

சன்மானங்கள் பலகொடுத்து சங்கப் புலவர்களிடம் தான் இடைக்காடனுக்கு செய்த குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினான். பல காலத்திற்குப் பின் ஆட்சியை மகனிடம் ஒப்படைத்து சிவபதம் அடைந்தான்.

**பல்லவி**

குலசேகர பாண்டியன் தன்முன் இசை பாடிய கபிலின்
நண்பன் இடைக் காடனை அலட்சியப் படுத்தினான்

**அனுபல்லவி**

கிலேசமடைந்த காடன் சொல்லின் வடிவம் அன்னைக்கும்
பொருள் வடிவம் உனக்கும் இது அவமானம் என்றான்

**சரணம்**

காடன் பாட்டை இகழ்ந்ததால் கடம்பவனம் நீங்கி
குபேரன் பூஜித்த லிங்கத்தில் உறைந்ததாய்ச் சொன்னீர்கள்
காடனை கெளரவித்த மன்னனை மன்னித்து
அம்மையுடன் திருக்கோயில் புகுந்தீர்